**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 01 ஆம் நாள் சனிக்கிழமை

**இ.ம.எண்.03/2021 இன் அ.வ.எண்.25/2021**

1) K.S.சரவணக்குமார்
2) இளவர் K.S.செல்வ விக்னேஷ்
பாதுகாவலர் தாயார் K.S.சபரிகிரிவேணி .... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர் /

1) விவேகானந்த செல்லியன்
2) கலைச்செல்வி
3) சந்துரு
4) தண்டபாணி
5) ராமசாமி .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 21.02.2025 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.நந்தகோபாலகார்த்திகேயன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.Su.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினரகளாக்கப்பட்டும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட...

**ஆணையுரை**

மனுதாரர்கள் வழக்கு 1–வது அயிட்ட சொத்துக்களுக்கு, வழக்கு 2–வது அயிட்ட மடை மற்றும் 3–வது அயிட்ட வாய்க்கால் மற்றும் தடம் வழியாக சென்று மராமரத்து செய்து குளப்பத்து வாய்க்கால் தண்ணீரை எடுத்து பாய்த்து விவசாயம் செய்வதை, எதிர்மனுதாரர்களோ, அவரது ஆட்கள் வகையறாக்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இவ்வழக்கு முடியும் வரை இடைக்கால

உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனு சங்கதியின் சுருக்கம்</u> :**

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவர். நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு 1–வது அயிட்ட சொத்துக்கள் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்டது. 1–வது அயிட்ட சொத்துக்களுக்கு 2–வது அயிட்ட மடை மூலம், வழக்கு 3–வது அயிட்ட அரணி வாய்க்கால் வழியாக உப்பாறு–குளப்பத்துக்குளம் வாய்க்கால் நீரை எடுத்து முன்னோர்கள் காலம் முதல் பாசனம் செய்துவருகிறார்கள். 1–ம் பிரதிவாதி 1–ம் மனுதாரரின் உடன் பிறந்த சகோதரரும், 2–ம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியின் மனைவியும் ஆவர். 3–ம் பிரதிவாதி, 1–ம் பிரதிவாதியின் நண்பர். 4, 5 பிரதிவாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளின் பணியாட்கள் ஆவர்.

**2.2)** வழக்கு 2–வது அயிட்டத்தில் உள்ள மடை வாய்க்கால் 1–ம் வாதி மற்றும் 2–ம் பிரதிவாதி பூமிக்கு கிழபுறமாக காளியாபுரம் கிராமம் புல எண் 568 பி, புல எண் 569 பி, 570 மற்றும் 571 பி ஆகிய காலைகளின் வழியாக சென்று அய்யர்மடையில் மேற்கு நோக்கி புல எண் 571/ஏ காலை மற்றும் புல எண் 562 ஆகியவற்றில் வந்து புல எண் 562 காலையில் வடக்கு நோக்கி திரும்பி மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட 1.32 ஏக்கர் பூமியை அடைகிறது. அய்யர்மடை பகுதியிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் வாய்க்கால் 3–ம் பிரதிவாதி பூமிக்கு கிழபுறமாக சென்றும், மூன்றாம் நபர்களின் பூமி வழியாக சென்றும் குளப்பத்துக்குளத்தை அடைகிறது. அய்யர்மடை பகுதியில் கடந்த 26.06.2018 அன்று 3 முதல் 5 பிரதிவாதிகள் தண்ணீர் பாயாத வகையில் அடைத்துவிட்டார்கள். 1–ம் மனுதாரர் பலமுறை கூறியும் மடையை திறக்காமல், மடையின் வடபுறத்தில் வாய்க்காலில் 5 அடி ஆழத்திற்கு JCB இயந்திரத்தின் மூலம் பள்ளம் தோண்டிவிட்டார்கள். இது குறித்து 3 முதல் 5 பிரதிவாதிகள் மீது கடந்த 26.06.2018 அன்று ஆனைமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து

விசாரித்தபோது, அவர்கள் 8 மற்றும் 9 ம் பிரதிவாதிகள் அனுமதியுடன் மடையை அடைத்திருப்பதாக கூறினார்கள்.

**2.3)** 6, 8 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக 1–ம் மனுதாரர் தாக்கல் செய்த நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகார வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் மடையை அடைக்கக்கூடாது என வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அறிவிப்பை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் மடையை சரி செய்யவில்லை. எனவே, பொள்ளாச்சி வட்டாட்சியரிடம் மனு கொடுத்ததில், மனு பரிசீலிக்கப்பட்டு ஆனைமலை உள்வட்ட நிலவருவாய் ஆய்வாளர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. நிலவருவாய் ஆய்வாளர் தள ஆய்வு செய்து அந்த அறிக்கையை வட்டாட்சியருக்கு அளித்தார். பிறகு 28.09.2018 அன்று விசாரணை உள்ளதாக 1–ம் மனுதாரருக்கும், 3–ம் பிரதிவாதிக்கும், 8–ம் பிரதிவாதி அலுவலர்களுக்கும் அறிவிப்பு அனுப்பப்பட்டது. 8, 9 பிரதவாதிகள் தரப்பிலிருந்து எந்த விளக்கமும் கொடுக்கவில்லை. பிறகு கடந்த 12.12.2018 அன்று 9–ம் பிரதிவாதிக்கு அனைத்து விபரங்களையும் தெரிவித்து துறைரீதியான அறிக்கை மற்றும் கருத்தை தெரிவிக்குமாறு அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனால் விளக்கமும் கொடுக்காமல், மடையையும் திறக்காமல் இருந்து வருகிறார்.

**2.4)** இது குறித்து 8, 9 பிரதிவாதிகளை அணுகியபோது, அவர்கள் 6, 7 பிரதிவாதிகளுக்குத்தான் மடையை சீரமைக்க உரிமை உள்ளது என்று கூறினார்கள். 6, 7 பிரதிவாதிகளை அணுகியபோது 8, 9 பிரதிவாதிகளுக்குத்தான் உரிமையுள்ளது என அலைகழித்தார்கள். எனவே, சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை எண் 7200/2019 வழக்கு தொடர்ந்ததில், 10.04.2019 அன்று மனுதாரர் கோரிக்கையை 4 வாரத்துக்குள் நிறைவேற்றும்படி 8–ம் பிரதிவாதிக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. பிறகும் காலம் கடத்திவந்த 8–ம் பிரதிவாதி கடந்த 21.05.2019 அன்று 2–ம் அயிட்ட மடையில் தடுப்புகள் இல்லை என்றும் தண்ணீர் பாய்ச்சிக்கொள்ள எந்த தடையும் இல்லை

என்றும் கடிதம் மூலம் தெரிவித்தார். ஆனால் மடையை சீரமைக்க சென்றபோது மீண்டும் 1 முதல் 5 பிரதிவாதிகள் தடுத்து, தகராறு செய்தார்கள். அதனால் பணி செய்ய பயந்து வேலையாட்கள் திரும்பி சென்றுவிட்டார்கள். 2, 3 அயிட்ட சொத்துக்களில் உள்ள உரிமையை தெளிவாக கூறியும், தீர்ப்பாணைகளை படித்து காண்பித்தும் 1 முதல் 5 பிரதிவாதிகள் மடையில் தண்ணீர் எடுக்கவிடாமல் தகராறு செய்துவருகிறார்கள். அவ்வாறு செய்ய 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் கிடையாது.

**2.5)** கடந்த 03.11.2020 அன்று மடையை சீரமைக்க சென்றபோது, 2–ம் பிரதிவாதி 1–ம் மனுதாரரை தடுத்து, வாய்க்கால் பக்கம் வரக்கூடாது என்றும், மீறினால் பொய் புகார் கொடுத்து ஜெயிலில் தள்ளிவிடுவேன் என மிரட்டுகிறார். சார்பு நீதிமன்ற அ.வ.எண் 126/2013 வழக்கில் பிறப்பித்த சமரச தீர்ப்பிற்கு எதிராக 2–ம் பிரதிவாதி வாகனங்கள் செல்ல முடியாதவாறு நெருக்கமாக தென்னங்கன்றுகளை நட்டுவருகிறார். 1 முதல் 5 பிரதிவாதிகள் மீண்டும் மீண்டும் வாய்க்காலை அழித்து அடைக்க முயற்சிக்கிறார்கள். அவர்கள் மிகுந்த செல்வாக்கும், ஆள்பலமும் உள்ளவர்கள். கடந்த 23.12.2020 அன்று களைக்கொல்லி மருந்து அடித்து செடிகளை அழித்து, வாய்க்காலை அழிமாட்டம் செய்ய முயன்றார்கள். 1–ம் மனுதாரர் அதை சிரமப்பட்டு தடுத்துவிட்டார். எனவே, மனுதாரர்கள்/வாதிகளால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இடைக்கால நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1 **மற்றும் 2–ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரை சங்கதிகளின் சுருக்கம்.**

மனு பொய்யானதும், மோசடியானதும், சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர் வழக்குகளை தாக்கல் செய்வதன் மூலம் தனது தவறுகளை சட்டப்பூர்வமாக்க முயற்சிக்கிறார்.

அய்யர்மடையிலிருந்து தண்ணீர் எடுத்துச்சென்று மனுதாரர்கள் பூமிக்கு பாய்ச்சுவதாக சொல்வது தவறு. அனைத்து விவசாயிகளுக்கும் அய்யர்மடையில் உரிமை உள்ள நிலையில் மனுதாரர்கள் தங்களுக்கு மட்டும் உரிமை உள்ளதாக கூறுவது தவறு. 1–வது அயிட்ட சொத்துக்களுக்கு 2 மற்றும் 3–வது அயிட்ட மடை மற்றும் வாய்க்கால் மூலம் பாயும் தண்ணீர் மட்டுமே பிரதானம் என கூறுவது தவறு. ஆரம்ப காலத்திலிருந்தே அய்யர்மடையிலிருந்து 1–வது அயிட்ட சொத்துக்கு தண்ணீர் கொண்டு செல்லும் வசதி இல்லை. பொதுவாக, நீர்ப்பாசன முறையானது நிலங்களுக்கு வசதியாகவும், எளிதாகவும், சீராகவும் பாசனம் செய்வதற்காக சமன் செய்யப்பட்ட மேற்பரப்பு வழியாக செல்கிறது. ஆனால், 3–வது அயிட்ட வாய்க்கால் நிலமட்டத்திலிருந்து 20 அடி கீழே உள்ளது. 1–வது அயிட்டம் நிலமட்டத்திலிருந்து 20 அடி மேலே உள்ளது. கடந்த 31.01.1981 அன்று மாவட்ட ஆட்சியர் 1–வது அயிட்ட சொத்து அய்யர்மடை பாசனத்தின் கீழ் வரவில்லை என கடிதம் அளித்துள்ளார். எனவே, மனுதாரர்கள் அதில் பாசன உரிமை கோருவது தவறாகும்.

**3.2)** மனுதாரர் மாவட்ட ஆட்சியருக்கு எதிராகவும், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகயோர்களுக்கு எதிராக தாக்கல் செய்த அ.வ.எண் 535/2003 வழக்கில் இந்த எதிர்மனுதாரர்களோ, அய்யர்மடை மூலம் பாசன வசதி பெறும் மற்ற விவசாயிகளோ தரப்பினர்கள் கிடையாது. எனினும், 31.01.1981 தேதியிட்ட மாவட்ட ஆட்சியரின் கடிதமானது மேற்கண்ட வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் மனுதாரரின் சொத்து உப்பாறு – குளப்பத்துக்குளத்தின் கீழ் பாசன வசதி பெறவில்லை என்று தெளிவாக தெரிவித்துள்ளார். ஆனால், செயற்பொறியாளர் ராமச்சந்திரன்பிள்ளை தனது 03.04.1982 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரரின் சொத்து ஆயக்கட்டு பாசனத்திற்கு உட்பட்டது என்று கூறியுள்ளார். எனினும், மேற்கண்ட வழக்கு அனுமதிக்கப்பட்டது. அதற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. கிட்டத்தட்ட 155 ஏக்கர் நிலம் அய்யர்மடை வாய்க்காலின்

மூலம் பாசனவசதி பெறுகிறது.

**3.3)** 2003–ம் வருடம் 20 அடிக்கு மேல் தனது நிலத்தை தோண்டி 3–வது அயிட்ட சொத்து மூலம் பாசன வசதி பெறுவதுபோல் மனுதாரர் ஏற்படுத்தியுள்ளார். அவ்வாறு சட்டத்திற்கு புறம்பாக செய்து, அது குறித்து அ.வ.எண் 535/2003 வழக்கை அரசு அமைப்புகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு இயற்கையாக பாசன வசதி பெறுவதற்கு முகாந்திரம் இல்லாத மனுதாரரின் நிலத்திற்கு செயற்கையாக பாசன வசதி பெறும் வகையில் மனுதாரர் செய்த செயலால் வாய்க்காலின் நீரோட்டம் பாதிக்கப்பட்டு, நீர் வீணாகிறது. மனுதாரர் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த அ.வ.எண் 126/2013 வழக்கில் சொத்து அய்யர்மடை மூலம் பாசனவசதி பெறுவதாக தன்னிச்சையாக தெரிவித்துள்ளார். ஆனால், அது குறித்து ஆவண ஆதாரம் எதுவும் கிடையாது. அவ்வாறு, வழக்குரையில் தெரிவித்துவிட்டதாலேயே மனுதாரருக்கு 3–வது அயிட்ட சொத்தான வாய்க்கால் மூலம் பாசன வசதி பெறும் உரிமை கிடைத்துவிடாது. மேற்கண்ட வழக்கில் மனுதாரர் குடும்பத்தாரிடையே ஏற்பட்ட சமரசத்தின் பேரிலான தீர்ப்பின்படி 1–ம் மனுதாரின் தாயார் 1–ம் மனுதாரர் பெயருக்கு 3–வது அயிட்ட சொத்தான வாய்க்கால் மூலம் பாசன வசதி பெறும் உரிமையையும் சேர்த்து எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் மனுதாரருக்கு எவ்வித உரிமையும் ஏற்படுத்தாது. அரசு ஆவணங்களில் மனு 1–வது அயிட்ட சொத்திற்கு மனு 3–வது அயிட்ட வாய்க்கால் மூலம் பாசன வசதி பெறுவது குறித்து எவ்வித குறிப்புகளும் இல்லை.

**3.4)** மனுதாரர் கூறுவது போல் 26.02.2018 அன்று 2 முதல் 5 பிரதிவாதிகள் 3–வது அயிட்ட சொத்தான வாய்க்காலை மூடவில்லை. விவசாயிகள் அனைவரும் சேர்ந்து அய்யர்மடையிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு ஆட்சேபித்தார்கள். அ.வ.எண் 535/2003–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 7200/2019 தாக்கல் செய்தார். ஆனால் அரசு ஆவணங்கள்படி

அய்யர்மடையிலிருந்து பாசன வசதி பெறும் வசதி மனு சொத்திற்கு இல்லை என்ற சங்கதியை மனுதாரர் மறைத்துள்ளார். 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள் வழக்கு 3–வது அயிட்ட சொத்தான வாய்க்காலை சேதப்படுத்தவில்லை.

**3.5)** 1–ம் எதிர்மனுதாரர், 2–ம் எதிர்மனுதாரர் சார்பாக கடந்த 22.03.2016 அன்று செட்டில்மென்ட் ஆவணம் எழுதிவைத்தார். எனவே, 2–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஏற்றுக்கொள்ள முடியாத குற்றச்சாட்டுகளை மனுதாரர் கூறியுள்ளார். 03.11.2020 அன்று 2–ம் எதிர்மனுதாரர், 1–ம் மனுதாரரை மிரட்டவில்லை. வழக்கு 3–வது அயிட்ட வாய்க்காலை சுற்றி 1, 2 எதிர்மனுதாரர்கள் தென்னங்கன்றுகளை நடவில்லை. அ.வ.எண் 126/2013–ல் தாக்கல் செய்யப்பட்ட சமரச குறிப்பாணையில், 1–ம் எதிர்மனுதாரர் தனது நிலமான புல எண் 571/ஏ வழியாக தண்ணீர் கொண்டு செல்வதற்கு 52 அடி அகலத்தில் நிலம் விட்டுவிடவேண்டியது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால், அய்யர்மடை 6 அடி அகலம் உடையதாகும். அய்யர்மடை மூலமாக மனுதாரர் நிலத்திற்கோ, எதிர்மனுதாரர் நிலத்திற்கோ பாசன வசதி செய்வதற்கான வசதி இல்லை. அவ்வாறு ஆரம்பத்திலிருந்து அய்யர்மடையிலிருந்து மனுதாரர் நிலத்திற்கு பாசன வசதி இருந்திருந்தால் புல எண் 571/ஏ நிலத்தில் 52 அடி அகலத்தில் வாய்க்காலுக்கென்று நிலம் ஒதுக்கவேண்டும் என்று சமரச குறிப்பாணையில் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**3.6)** வழக்கு 3–வது அயிட்ட சொத்தான வாய்க்காலை மனுதாரர் சட்டத்திற்கு புறம்பாக ஏற்படுத்தியுள்ளார். வழக்கு 3–வது அயிட்ட வாய்க்கால் வழியாக பாசன வசதி பெறும் உரிமை எதிர்மனுதாரர்களுக்கு இல்லை. அவ்வாறான ஒரு நிபந்தனையை மனதாரரே தன்னிச்சையாக விதித்துள்ளார். எனவே, வழக்கு 2–வது அயிட்ட சொத்தான அய்யர்மடை வாய்க்காலிலிருந்து மனு 1–வது அயிட்ட சொத்திற்கு பாசன வசதி பெறும் வசதியோ, உரிமையோ இல்லை என்பதால் மனுதாரர் சார்பாக முதல் நோக்கு வழக்கு இல்லை. வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு பொது வண்டிப்பாதையை எதிர்மனுதாரர்கள்

பயன்படுத்துவதற்கு 1–ம் எதிர்மனுதாரர் தடை ஏற்படுத்தியதால் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4) <u>3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரை சங்கதிகளின் சுருக்கம்.</u>

மனு பொய்யானதும், மோசடியானதும், சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்கவேண்டும். மனுதாரர் வழக்குகளை தாக்கல் செய்வதன் மூலம் தனது தவறுகளை சட்டப்பூர்வமாக்க முயற்சிக்கிறார். அய்யர்மடையிலிருந்து தண்ணீர் எடுத்துச்சென்று மனுதாரர்கள் பூமிக்கு பாய்ச்சுவதாக சொல்வது தவறு. அனைத்து விவசாயிகளுக்கும் அய்யர்மடையில் உரிமை உள்ள நிலையில் மனுதாரர்கள் தங்களுக்கு மட்டும் உரிமை உள்ளதாக கூறுவது தவறு. 1–வது அயிட்ட சொத்துக்களுக்கு 2 மற்றும் 3–வது அயிட்ட மடை மற்றும் வாய்க்கால் மூலம் பாயும் தண்ணீர் மட்டுமே பிரதானம் என கூறுவது தவறு. ஆரம்பத்தில் வழக்கு சொத்தை பெற்ற காலம் சென்ற சண்முகவேல் காலத்தில் இருந்தே அய்யர்மடையிலிருந்து 1–வது அயிட்ட சொத்துக்கு தண்ணீர் கொண்டு செல்லும் வசதி இல்லை. பொதுவாக, நீர்ப்பாசன முறையானது நிலங்களுக்கு வசதியாகவும், எளிதாகவும், சீராகவும் பாசனம் செய்வதற்காக சமன் செய்யப்பட்ட மேற்பரப்பு வழியாக செல்கிறது. ஆனால், 3–வது அயிட்டம் நிலமட்டத்திலிருந்து 20 அடி கீழே உள்ளது. 1–வது அயிட்டம் நிலமட்டத்திலிருந்து 20 அடி மேலே உள்ளது. கடந்த 31.01.1981 அன்று மாவட்ட ஆட்சியர் 1–வது அயிட்ட சொத்து, அய்யர்மடை பாசனத்தின் கீழ் வரவில்லை என கடிதம் அளித்துள்ளார். எனவே, மனுதாரர்கள் அதில் பாசன உரிமை கோருவது தவறாகும்.

**4.2)** மனுதாரர் மாவட்ட ஆட்சியருக்கு எதிராகவும், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர் ஆகயோர்களுக்கு எதிராக தாக்கல் செய்த அ.வ.எண்

535/2003 வழக்கில் இந்த எதிர்மனுதாரர்களோ, அய்யர்மடை மூலம் பாசன வசதி பெறும் மற்ற விவசாயிகளோ தரப்பினர்கள் கிடையாது. 31.01.1981 தேதியிட்ட மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் மனுதாரரின் சொத்து அய்யர்மடையின் கீழ் பாசன வசதி பெறவில்லை என்று தெளிவாக தெரிவித்துள்ளார். ஆனால், செயற்பொறியாளர் ராமச்சந்திரன்பிள்ளை தனது 03.04.1982 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரரின் சொத்து ஆயக்கட்டு பாசனத்திற்கு உட்பட்டது என்று கூறியுள்ளார். எனினும், மேற்கண்ட வழக்கு அனுமதிக்கப்பட்டது. அதற்கு எதிராக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. கிட்டத்தட்ட 155 ஏக்கர் நிலம் அய்யர்மடை வாய்க்காலின் மூலம் பாசனவசதி பெறுகிறது.

**4.3)** 2003–ம் வருடம் 20 அடிக்கு மேல் தனது நிலத்தை தோண்டி 3–வது அயிட்ட சொத்து மூலம் பாசன வசதி பெறுவதுபோல் மனுதாரர் ஏற்படுத்தியுள்ளார். அவ்வாறு சட்டத்திற்கு புறம்பாக செய்து, அது குறித்து அ.வ.எண் 535/2003 வழக்கை அரசு அமைப்புகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு இயற்கையாக பாசன வசதி பெறுவதற்கு முகாந்திரம் இல்லாத மனுதாரரின் நிலத்திற்கு செயற்கையாக பாசன வசதி பெறும் வகையில் மனுதாரர் செய்த செயலால் வாய்க்காலின் நீரோட்டம் பாதிக்கப்பட்டு, நீர் வீணாகிறது. மனுதாரர் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த அ.வ.எண் 126/2013 வழக்கில் சொத்து அய்யர்மடை மூலம் பாசனவசதி பெறுவதாக தன்னிச்சையாக தெரிவித்துள்ளார். ஆனால், அது குறித்து ஆவண ஆதாரம் எதுவும் கிடையாது. மேற்கண்ட வழக்கில் மனுதாரர் குடும்பத்தாரிடையே ஏற்பட்ட சமரசத்தின் பேரிலான தீர்ப்பின்படி 1–ம் மனுதாரின் தாயார் எழுதிய செட்டில்மெண்ட் அவர்களாகவே சட்ட உரிமையில்லாமல் ஏற்படுத்தியதாகும். அதில் மனுதாரர் எந்த உரிமையும் கோர முடியாது.

**4.4)** 1–ம் மனுதாரரின் மூதாதையர்கள் வழக்கு 2–வது மற்றும் 3–வது அயிட்டம் மூலம் தடையின்றி அயிட்டம் 1–ற்கு பாசனம் செய்தது தவறானது,

ஏற்றுக்கொள்ள முடியாதது. விவசாயிகள் அனைவரும் சேர்ந்து அய்யர்மடையிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு ஆட்சேபித்தார்கள். 1 முதல் 3 எதிர்மனுதாரர்களோ, மற்ற எதிர்மனுதாரர்களோ வாய்க்காலை சேதப்படுத்தவேண்டிய அவசியம் இல்லை. அய்யர்மடையில் 20 அடி ஆழத்தில் சிறிய குழி தோண்டி தண்ணீர் எடுப்பதால் உரிமையுள்ளவர்களுக்கு கிடைக்கவேண்டிய தண்ணீர் குறைகிறது. எதிர்மனுதாரர் மீது சொல்லியுள்ள குற்றச்சாட்டுக்கள் ஆதாரம் இல்லாதவை. வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை. அய்யர்மடையிலிருந்து மனுதாரர்கள் பாசன உரிமையை சட்டவிரோதமாக கோருவது நீதிமன்ற உத்தரவின் மூலம் சட்டப்பூர்வமாக்கப்பட முடியாது. எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

5) இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

7) **பிரச்சினை** :

மனு மற்றும் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகள், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் இருதரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாய்மொழி வாதங்களை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்தது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.27** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் **எ.ம.சா.ஆ.1** முதல் **எ.ம.சா.ஆ.6** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

7.2) மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவர். உப்பாறு–குளப்பத்துக்குளத்திலிருந்து வழக்கு 2–வது அயிட்ட அய்யர்மடையிலிருந்து வரும் தண்ணீரை வழக்கு 3–வது அயிட்ட அரணி வாய்க்கால் மூலம் வழக்கு

1–வது அயிட்ட சொத்து பாசன வசதி பெற்றுவந்ததாகவும், 3 முதல் 5 பிரதிவாதிகள் கடந்த 26.06.2018 அன்று மேற்படி மடையை தண்ணீர் பாயாதவாறு அடைத்துவிட்டார்கள் என்றும், 6 முதல் 9 பிரதிவாதிகளிடம் புகார் அளித்தும், அவர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எனவே, வழக்கு 2–வது அயிட்ட மடை மற்றும் 3–வது அயிட்ட வாய்க்கால் மூலம் சென்று மராமத்து செய்து குளப்பத்துவாய்க்கால் தண்ணீரை பயன்படுத்தி 1–வது அயிட்ட சொத்தில் விவசாயம் செய்வதற்கு எவ்வித இடையூறும் ஏற்படுத்தக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.3)** 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் உப்பாறு–குளப்பத்துக்குளம் ஆயக்கட்டில் மனுதாரர்களின் 1–வது அயிட்ட சொத்து சேர்க்கப்படவில்லை என்றும், மேற்கண்ட ஆயக்கட்டின் மூலம் பாசன வசதி பெறும் வசதி 1–வது அயிட்ட சொத்திற்கு இல்லை என்றும், 1–வது அயிட்ட சொத்தானது அய்யர்மடையைவிட 20 அடி உயரத்தில் உள்ளது என்றும், எனவே, பொய்யான சங்கதிகளை கொண்ட மனுதாரர்களின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.4)** மனுதாரரின் தகப்பனார் சண்முகவேல் இதே மனு சொத்துக்களை உப்பாறு ஆயக்கட்டு பாசனத்தின் கீழ் சேர்க்குமாறு கொடுத்த மனுவை நிராகரித்து கோவை மாவட்ட ஆட்சியர் 31.01.1981 அன்று உத்தரவு பிறப்பித்துள்ளார் என்பது எ.ம.சா.ஆ.4–ஐ பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது. இதே வழக்கு 1–வது அயிட்ட சொத்து குறித்து உப்பாறு–குளப்பத்துக்குளம் ஆயக்கட்டு பிரதான வாய்க்கால் மூலம் தண்ணீர் எடுப்பதை தடை செய்யக்கூடாது என்று, இவ்வழக்கின் 6, 8 மற்றும் 9 பிரதிவாதிகளுக்கு எதிராக 1–ம் மனுதாரர் தாக்கல் செய்த அ.வ.எண் 535/2003 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 ஆக

குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**7.5)** மேற்கண்ட வழக்கில் கோவை மாவட்ட ஆட்சியரின் உத்தரவான எ.ம.சா.ஆ.4 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டு, மனுதாரரது கோரிக்கையை நிராகரித்து எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது. எனினும், செயற்பொறியாளர் ராமச்சந்திரன்பிள்ளை என்பவர் வழக்கு சொத்துக்கள் ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டுள்ளதாக கடிதம் அளித்ததை பரிசீலனை செய்த இந்நீதிமன்றம் மேற்படி அ.வ.எண் 535/2003 வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்துள்ளது தெரியவருகிறது. எனினும், மேற்படி அ.வ.எண் 535/2003–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை பரிசீலனை செய்கையில் 559, 571ஏ, 575, 574, 568ஏ ஆகிய புல எண்களில் 574 மற்றும் 568ஏ புல எண்கள் மேற்படி உப்பாறு–குளப்பத்துக்குளம் ஆயக்கட்டில் பாசன வசதி பெறுகிறது என்ற வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றமானது திட்டவட்டமாக தனது தீர்ப்பில் கூறியுள்ளது. மேற்படி அ.வ.எண் 535/2003–ல் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையிலேயே மனுதாரர் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்போராணை மனு எண் 7200/2019 தாக்கல் செய்து அதில் மனுதாரரின் கோரிக்கையை பரிசீலனை செய்யுமாறு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**7.6)** மேற்படி வழக்கிற்கு பின்னிட்டு, ஒரு தனலட்சுமி என்பவர் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் கீழ், புல எண்கள் 559, 560, 562, 571ஏ, 575 ஆகிய நிலங்கள் குளுப்பத்துக்குளம் ஆயக்கட்டின் கீழ் வருகிறதா என்பது குறித்து செயற்பொறியாளர், நீர்வளத்துறை அலுவலகத்தில் கோரிய தகவலுக்கு குளப்பத்துக்குளம் ஆயக்கட்டு பதிவேட்டில் மேற்கண்ட புல எண்கள் இல்லை என்று பொதுத் தகவல் அலுவலர் கடந்த 23.11.2021 அன்று பதில் அளித்துள்ளார் என்ற சங்கதி எ.ம.சா.ஆ.5–ஐ பரிசீலனை செய்கையில் தெரியவருகிறது.

**7.7)** 1–ம் மனுதாரர் ஏற்கனவே தாக்கல் செய்த அ.வ.எண் 535/2003 லோ அல்லது இவ்வழக்கிலோ உப்பாறு–குளப்பத்துக்குளம் ஆயக்கட்டிலிருந்து பாசன வசதி பெறும் தனது உரிமையை விளம்புகை செய்யுமாறு விளம்புகை பரிகாரம் எதுவும் கோரவில்லை. மனு 1–வது அயிட்ட சொத்துக்கள் உப்பாறு – குளப்பத்துக்குளத்திலிருந்து வரும் அய்யர்மடை வாய்க்கால் மூலம் பாசன வசதி பெறவில்லை என 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் திட்டவட்டமாக மறுத்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே கூறியவாறு இந்நீதிமன்றம் அ.வ.எண் 535/2003–ல் கூறிய மனு சொத்துக்களான 559, 571 ஏ, 574, 575 மற்றும் 568 ஏ புல எண்களில் 571, 568 ஏ புல எண்கள் மேற்படி உப்பாறு–குளப்பத்துக்குளம் ஆயக்கட்டில் பாசன வசதி பெறுகிறது என்ற வழக்கை மனுதாரர் நிருபிக்கவில்லை என்ற தீர்ப்பிற்கு எதிராக மனுதாரர் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. இந்நிலையில் உப்பாறு – குளப்பத்துக்குளம் ஆயக்கட்டின் மூலம் மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட புல எண்கள் 574 மற்றும் 568 ஏ–ல் கண்ட நிலங்கள் பாசன வசதி பெறவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில், அந்த தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்யாமல், மீண்டும் மேற்கண்ட புல எண்களை மனுதாரருக்கு பாத்தியப்பட்ட மற்ற புல எண்களில் கண்ட சொத்துக்களுடன் சேர்த்து உப்பாறு – குளப்பத்துக்குளம் ஆயக்கட்டு அய்யர்மடை வாய்க்காலிலிருந்து தண்ணீர் எடுப்பதை பிரதிவாதிகள் தடை செய்யக்கூடாது என்று மீண்டும் இவ்வழக்கில் இடைக்கால பரிகாரம் கோரியுள்ளார். எனவே, இம்மனுவை அனுமதிப்பதற்கான முதல் நோக்கு வழக்கு மனுதாரர் சார்பாக இல்லை. எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்யலாம் என முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வாணையுரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு மார்ச் திங்கள் 01 ஆம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

**ஒப்பம்/— (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி :**

—இல்லை—

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 01.02.2010 | அ.வ.எண் 535/2003—ன் தீர்ப்பாணை நகல். |
| ம.சா.ஆ.2 | 01.02.2020 | அ.வ.எண் 535/2003—ன் தீர்ப்புரை நகல். |
| ம.சா.ஆ.3 | 06.12.2014 | அ.வ.எண் 126/2013—ன் சமரச நீதிமன்றத்தின் தீர்ப்பாணை நகல் |
| ம.சா.ஆ.4 | 12.11.2020 | சிட்டா (பட்டா எண் 2423) — இணையதள நகல். |
| ம.சா.ஆ.5 | 12.11.2020 | க.ச.எண் 567—ன் புல வரைபடம் — இணையதள நகல். |
| ம.சா.ஆ.6 | 12.11.2020 | க.ச.எண் 568—ன் புல வரைபடம் — இணையதள நகல். |
| ம.சா.ஆ.7 | 12.11.2020 | க.ச.எண் 569—ன் புல வரைபடம் — இணையதள நகல். |
| ம.சா.ஆ.8 | 12.11.2020 | க.ச.எண் 571—ன் புல வரைபடம் — இணையதள நகல். |
| ம.சா.ஆ.9 | 12.11.2020 | க.ச.எண் 572—ன் புல வரைபடம் — இணையதள நகல். |
| ம.சா.ஆ.10 | 12.11.2020 | க.ச.எண் 579—ன் புல வரைபடம் — இணையதள நகல். |
| ம.சா.ஆ.11 | 26.06.2018 | ஆனைமலை காவல் நிலையத்திற்கு அனுப்பிய கடித நகல் |

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.12 | 26.06.2018 | காவல் ஆய்வாளர் அனுப்பிய மனு எண் 261/2018-ன் ரசீது நகல். |
| ம.சா.ஆ.13 | 03.07.2018 | வழக்கறிஞர் மூலம் அனுப்பிய கடித நகல். |
| ம.சா.ஆ.14 | 16.08.2018 | வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு நகல். |
| ம.சா.ஆ.15 | 17.09.2018 | ஆனைமலை வட்டாட்சியர் விசாரணைக்கு அழைத்த கடித நகல். |
| ம.சா.ஆ.16 | 28.09.2018 | பொள்ளாச்சி வட்டாட்சியருக்கு வாதி வழங்கிய ஆவணங்கள் நகல் அனுப்பிய விண்ணப்ப நகல் |
| ம.சா.ஆ.17 | 27.09.2018 | ஆனைமலை காவல் ஆய்வாளருக்கு வாதி வழங்கிய ஆவணங்கள் நகல் அனுப்பிய விண்ணப்ப நகல் |
| ம.சா.ஆ.18 | 08.09.2018 | ஆனைமலை வருவாய் ஆய்வாளர் பொள்ளாச்சி வட்டாட்சியருக்கு அனுப்பிய கடிதம் |
| ம.சா.ஆ.19 | 12.12.2018 | பொள்ளாச்சி வட்டாட்சியர் ஆழியார் உதவி செயற்பொறியாருக்கு அனுப்பிய கடிதம். |
| ம.சா.ஆ.20 | 10.04.2019 | சென்னை உயர்நீதிமன்ற WP No.7200/2019, WP No.7929/2019-ன் உத்தரவு நகல். |
| ம.சா.ஆ.21 | 21.05.2019 | பரம்பிக்குளம் செயற்பொறியாளர் வாதிக்கு அனுப்பிய கடிதம். |
| ம.சா.ஆ.22 | 26.08.2019 | ஆனைமலை காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய கடித நகல். |
| ம.சா.ஆ.23 | 22.03.2016 | விவேகானந்த செல்லியன் கலைச்செல்விக்கு எழுதிவைத்த செட்டில்மெண்ட் ஆவணம் – சான்று நகல். |
| ம.சா.ஆ.24 | 28.07.2020 | ஆனைமலை காவல் ஆய்வாளருக்கு அனுப்பிய கடித நகல். |
| ம.சா.ஆ.25 | 25.04.2019 | ஆனைமலை வட்டாட்சியர் மற்றும் பரம்பிக்குளம் செயற்பொறியாளருக்கு அனுப்பிய கடிதம். |
| ம.சா.ஆ.26 | 10.12.2015 | செட்டில்மெண்ட் ஆவணம் – சான்று நகல். |
| ம.சா.ஆ.27 | – | வழக்கு சொத்தின் வரைபடம் |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி:</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 23.10.2024 | 3–ம் எதிர்மனுதாரர் பெயரில் உள்ள சிட்டா – கணினி நகல். |
| எ.ம.சா.ஆ.2 | 23.11.2018 | GOC 310 குளத்துப்பள்ளம் பாசன நகல். |
| எ.ம.சா.ஆ.3 | – | குளத்துப்பள்ளம் மற்றும் வரதுவாய்க்கால் பாசன நில உடைமையாளர்களின் வாக்காளர் பட்டியல் – நகல். |
| எ.ம.சா.ஆ.4 | 31.01.1981 | மாவட்ட ஆட்சியரின் கடிதம் |
| எ.ம.சா.ஆ.5 | 23.11.2021 | செயற்பொறியாளர் கடிதம் |
| எ.ம.சா.ஆ.6 | – | புகைப்படம் (2 எண்கள்) குறுந்தகடுடன் கூடியது. |

**ஒப்பம்/– (N. பாரதிராஜன்)**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---------------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**
இ.ம. எண் 03/2021 இன் ஓ.எஸ்.25/2021
நாள் : 01.03.2025
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---------------------------------------